# பிரதமர் மோடியின் அமெரிக்க விஜயம் : மறைக்கப்பட்ட உண்மைகள்!


**கா**ற்று நுழைய முடியாத இடங்களில் கூட ஊடகவியலாளர்களும், செய்தியாளர்களும் நுழைந்து விடுவார்கள் - எனக் கூறப்படுவது நம்மில் பலரும் கேட்டது! அது என்னவோ தெரியவில்லை பிரதமர் மோடியின் அமெரிக்க விஜயம் குறித்து இந்திய ஊடகங்களில், செய்தித்தாள்களில் காண முடியாத பல மோடி எதிர்ப்பு விவகாரங்கள் இப்போது சமூக வலைதளங்களில் பவனி வரத்தொடங்கியுள்ளன! அந்த செய்திகளைப் பார்த்து பல்லாயிரக்கணக்கில் 'லைக்' பதிவு செய்துள்ளனர்.

ஆகா... எந்த இந்தியப் பிரதமரும் காணாத வரவேற்பு என்று, ஏடுகளிலும், ஊடகங்களில் வரும் செய்திகளைச் சுட்டிக்காட்டி மோடி ஆதரவு கூட்டம் புளகாங்கிதம் கொள்ளும் நேரத்தில், சமூக வலைதளங்களில் வரும் செய்திகள் மோடியை அங்கு சிலர் எப்படி வறுத்தெடுத்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக்குகின்றன!

ஒரு பக்கம் வரவேற்பு, மறுபக்கம் அந்த வரவேற்புக்கு சளைக்காத எதிர்ப்பு! எதிர்ப்பை ஒட்டி அமெரிக்க குடியரசுத் தலைவர் மாளிகை முன் பதாகைகள்! அதிலே 'Prime Minister Modi' 'Crime Minister Modi' யாக காட்சியளிக்கிறார்!

ஒரு பதாகையில் பாதி மோடி உருவம், மறு பாதி ஹிட்லர் உருவம் அதன் மேலே 'அடால்ப் மோடி' (Adolf Modi) நாசி மோடி (Nazi Modi) என்ற வாசகங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

இன்னொரு சீக்கியர் கையிலே "Modi... Face of Indian Terrorism" ('மோடி'- 'இந்திய பயங்கரவாதத்தின் முகம்') - என்ற வாசகத்துடன் மோடி அவர்களின் முகத்தோடு கூடிய பதாகை! இன்னும் சிலர் "Go Back Modi" எனும் வாசகங்களுக்கு கீழே பிரதமர் மோடி குறித்து இங்கே எழுத இயலாத கடும் வாசகங்கள்!



**சிலந்தி**

இப்படி மோடிக்கு எதிராக எதிர்ப்பை காட்டியவர்கள் கையிலே இந்திய தேசியக் கொடி!

**"Huge Protest in U.S.A... First ever PM in Indian History to face backlash in U.S.A. என்ற தலைப்பு அடங்கிய புகைப்படங்கள் பல வலைதளங்களில் - ஆம் - வலைதளங்களில் மட்டுமே வலம் வந்து கொண்டிருக்கின்றன!**

பிரதமர் மோடிக்கு மட்டும் அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, அவர்களது குடியரசுத் தலைவருக்கும் சில கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

Hey Joe! Ask Modi! Why Student activist Umar Khalid has been in Prison for 1000 Days without Trial?

ஹே ஜோ (அமெரிக்க குடியரசுத் தலைவர்) உமர் காலித் எனும் மாணவ ஆர்வலர் 1000 நாட்கள் கடந்தும் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதன் காரணம் என்ன என்பதை மோடியிடம் கேளுங்கள்.

என்றெல்லாம் அந்த பதாகையில் வாசகங்கள் பளிச்சிடுகின்றன! அமெரிக்க குடியரசுத் தலைவரின் வெள்ளை மாளிகையில் விருந்து உபசாரத்துடன் வரவேற்பு; வெளியே இந்தியப் பிரதமர் மோடிக்கு எந்தத் தடையுமற்ற எதிர்ப்பு!



அமெரிக்காவின் வெள்ளை மாளிகை முன் பத்திரிகையாளர் நிரஞ்சன் டேக்கில் இந்தியாவின் ஜனநாயகம் அபாயத்தில் உள்ளதாக குறிப்பிடும் பதாகையை ஏந்தி பேட்டி அளிக்கும் காட்சி!

எல்லாவற்றையும் விட உச்சகட்டம், நிரஞ்சன் டேக்கில் (Niranjan Takle) எனும் எழுத்தாளர், அமெரிக்காவின் வெள்ளை மாளிகை முன் கூடியிருந்தவர்கள் மத்தியில் மோடிக்கு எதிராக ஒரு பிரச்சாரமே நடத்துகிறார்.

அவர் பேச்சைக் கேளுங்கள்!

"இந்தியாவில் 25 வருடங்களுக்கு மேலாக, புலனாய்வு ஊடகவியலாளராக நான் பணியாற்றியுள்ளேன். எனது கடைசி புலனாய்வு தகவல், லோயா எனும் நீதிபதியின் கொலை குறித்தது. நான் தந்த புலனாய்வு தகவல் எனது தொழிலை முடிவுக்குக் கொண்டுவந்தது. இதுவே இந்தியாவில் பத்திரிகையாளர்களுக்கும், பத்திரிகை சுதந்திரத்துக்கும் எந்த நிலை இருக்கிறது என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

2017-ல் நடந்த அந்த பெரிய கதை எனது தொழிலுக்கு முடிவு கட்டியது!.

**"அமெரிக்கா பேச்சு சுதந்திரத்தைக் கொண்டுள்ளது. அமெரிக்கா ஜனநாயகத்தைக் கொண்டுள்ளது. அமெரிக்கா சுதந்திரத்தைக் கொண்டுள்ளது. அமெரிக்கா மதச்சார்பின்மையைக் கொண்டுள்ளது- என்றெல்லாம் கூறப்படும் அமெரிக்கா, இந்தியாவில் அத்தனை மதிப்புகளையும் தனது நாட்டில் சீரழித்து விட்ட ஒரு மனிதரை இங்கு அழைத்துள்ளது.**

**இந்தியாவில் குஜராத்தில் 2002-ல் நடந்த கலவரத்தில் பெயர் பெற்றவர் நரேந்திரமோடி, இப்போதும் கூட இந்தியாவின் மணிப்பூரில் கடந்த ஒன்றரை மாதங்களாக நடைபெற்று வரும் கலவரங்களுக்கும் அவர் பெயர் பெற்றவர்! மக்கள் அங்கு இனக்கலவரத்தால் கொல்லப்படுகிறார்கள். எங்கும் அமைதியின்மை கோலோச்சுகிறது. ஆனால் இந்தியாவின் பிரதமர் அது குறித்து இதுவரை ஒருவார்த்தை கூட கூறிடவில்லை.**

**ஒரு திரைப்பட நடிகர் இறந்தால் கூட அது குறித்து 'டிவிட்' செய்யும் பிரதமர் நரேந்திர மோடி, நூற்றுக் கணக்கான மக்கள் அங்கே செத்துக் கொண்டிருப்பது குறித்து ஒரு வார்த்தைகூட இதுவரை தெரிவிக்கவில்லை.**

...கடந்த பல வருடங்களாக இந்த மனிதர் (பிரதமர் மோடி) ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை கூட நடத்தியதில்லை! இத்தகைய எதேச்சிகார ஆட்சியை நடத்தும் நரேந்திர மோடியை, ஜனநாயக ஆட்சி நடத்தும் பைடன் வரவேற்றிருப்பது எத்தகைய நியாயம்? - என்று வெள்ளை மாளிகை முன் நின்று பேசுகிறார்.

பிரதமர் மோடி வெள்ளை மாளிகையின் உள்ளே, ஜனநாயகத்தின் பெருமைகள் குறித்து பேசிய போது, இந்தியாவில் ஜனநாயகம், படும் பாடு குறித்து பாதிக்கப்பட்ட ஒரு பத்திரிக்கையாளர் வெள்ளை மாளிகைக்கு வெளியே அதற்காக விளக்கமளிக்கிறார்.

வெளிவேஷம் கலைந்து விட்டது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அமெரிக்காவில் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு உள்ளே மோடி கட்டிய வேஷம் வெளியே கலைந்து கொண்டிருந்தது.




இதுபோன்ற எதிர்ப்பு அலைகள் எல்லாம் - இங்கே இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.

இந்திய ஊடகங்கள், ஏடுகள் எதிலும் இந்த செய்திகள் வெளிவரவில்லை. சமூக ஊடகங்கள் வெளியிடும் தகவல்கள் எங்கும் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன! பி.ஜே.பி. கூட்டம் திட்டமிட்டு நாட்டில் நடத்திடும் ஜனநாயகப் படுகொலைகளை அதிகாரத்தை வைத்து ஆட்சியாளர்கள் மூடிமறைத்தாலும், அதனைத்தாண்டி அந்த முடை நாற்றம் வெளிவரத் தொடங்கிவிட்டன!

**சிலரை சில காலம் ஏமாற்றலாம்! பலரை பல நாள் ஏமாற்ற முடியாது!**

**முழித்துக்கொண்டு விட்டது நாடு என்பதை ஒன்றிய ஆட்சியாளர்கள் உணர்ந்தால் சரி!**

## இந்தியப் பிரதமர் மோடி வருகையின்போது அமெரிக்காவில் வைக்கப்பட்டிருந்த பதாகைகள்!

